# முயற்சியாண்மைக்கல்வி

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## வணிகச் சூழல்

## தரம் 10

**05**

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

**மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1) தற்கால வணிகச் சூழலில் காணப்படக் கூடிய பண்பாக அமைவது,

I. சூழல் காரணிகள் அதிகமாக மாற்றமடையவில்லை.
II. அதிகமான போட்டித்தன்மை சமூகத்தில் காணப்படுதல்.
III. மனிதர்கள் தங்களுடைய தேவைகள் மற்றும் விருப்பங்களை குறைந்த மட்டத்தில் நிறைவேற்ற முயல்கின்றனர்.
IV. மனித தேவைகளை நிறைவேற்ற காணப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் வரையறுக்கப்பட்ட அளவில் காணப்படுதல்.

2) முயற்சியாளர்களுக்கு புதிய கடன் முறையை அறிமுகப்படுத்துதல் என்பதால் அறியப்படுவது,

I. கட்டுப்படுத்தக் கூடிய காரணியாகும்.
II. சவாலாகும்
III. வாய்ப்பாகும்
IV. போட்டி நன்மையாக

3) வணிகச் சூழல் காரணிகளுள் வணிகத்தினால் கட்டுப்படுத்தக்கூடிய காரணிகள் உள்ளடங்குவது,

I. புறச்சூழல் காரணிகள்
II. அகச்சூழல் காரணிகள்
III. மக்கள் சூழல்
IV. பூகோளச் சூழல் காரணிகள்

4) வரிவீதங்கள் அதிகப்படுத்துதல் முயற்சியான்மைக்கு ஏற்படுத்தும் தாக்கம்.

I. நன்மையாக அமையும்
II. தீமையாகும்
III. சவாலாக அமையும்
IV. தாக்கம் ஏற்படுத்தாது

5) வணிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சமூக சூழல் காரணிகளை உள்ளடக்கியது,

I. சனத்தொகை வளர்ச்சி வீதம் , வயதமைப்பு
II. சனத்தொகை வளர்ச்சி வீதம், , வயதமைப்பு
III. சனத்தொகை வளர்ச்சி வீதம், விலைமட்ட மாற்றம், வயதமைப்பு
IV. சனத்தொகை வளர்ச்சி வீதம், மக்கள் கலாச்சாரம், வயதமைப்பு வயதமைப்பு

6) வணிகச் சூழலில் காணப்படக்கூடிய பிரதான வேறுபாடு

I. வணிகர்கள் பலமடைதல்.
II. மக்களின் அடிப்படை தேவைகள் காணப்படல்.
III. பூகோள கிராமமாக மாற்றமடைதல்.
IV. இலாபம் பிரதான நோக்கமாக அமைதல்.

7) வணிகச்சூழல் அகச்சூழல், புறச்சூழல் என இருவகைப்படும். பின்வருவனவற்றுள் புறச்சூழல் காரணிகளை உள்ளடக்கிய சரியான விடை,

I. அண்மிய சூழல், பூகோளச்சூழல்
II. தொழில்நுட்பச்சூழல், ஊழியர்கள்
III. உரிமையாளர்கள், மக்கள் சூழல்
IV. ஊழியர்கள், முகாமையாளர்கள்

8) கடன்களுக்கான வட்டி வீதங்கள் உயர்த்தப்படல் வணிகங்களுக்கு சவாலாகும் இது உள்ளடங்கும் வணிகச் சூழல்,

I. மக்கள் சூழல்
II. அரசியல் சூழல்
III. பூகோளச் சூழல்
IV. பொருளாதார சூழல்

9) அகச்சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கிய சரியான விடை,

I. தலைவர், உற்பத்தியாளர், வாடிக்கையாளர்
II. முயற்சியாளர், வாடிக்கையாளர், ஊழியர்கள்
III. உரிமையாளர், உற்பத்தியாளர், தலைவர்
IV. முகாமையாளர், உரிமையாளர், ஊழியர்கள்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

10) வணிகச் சூழல் தொடர்பாக கருத்தில் கொள்ளும் போது நவீன வணிகச்சூழலில் புராதன வணிகச் சூழலை விட அதிக மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதற்கமைய புராதன வணிகச் சூழலில் காணப்படும் காரணியாக அமைவது,

I. தேவைகளும் விருப்பங்களும் விரிவடைந்து காணப்படல்.

II. தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு எண்ணிலடங்கா பொருட்கள்/ சேவைகள் காணப்படல்.

III. போட்டித் தன்மை அதிகரித்தல்.

IV. வணிகர்கள் போட்டித் தன்மையுடையவர்களாக இருந்தனர்.

11) வணிகத்தில் அகச்சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கிய விடை,

I. உரிமையாளர், முகாமையாளர், ஊழியர்கள், தொழில்நுட்பச் சூழல்

II. உரிமையாளர், முகாமையாளர், ஊழியர்கள், வளங்கள்

III. உரிமையாளர், முகாமையாளர், மக்கள் சூழல், வளங்கள்

IV. உரிமையாளர், முகாமையாளர், ஊழியர்கள், பூகோளச்சூழல்

12) வணிகமொன்றின் அகச்சூழல் காரணிகளை கற்பதன் மூலம் கண்டுகொள்ளக் கூடியது,

I. பலம் மற்றும் பலவீனம்

II. வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்

III. பலம் மற்றும் வாய்ப்புக்கள்

IV. வாய்ப்புக்கள் மற்றும் பலவீனம்

13) வணிகமொன்றின் புறச்சூழல் காரணிகளாக மட்டும் உள்ளடக்கியது,

I. ஊழியர்கள், முகாமையாளர், உரிமையாளர்

II. வட்டி வீதம், விலைமட்டம், ஊழியர்கள்

III. வட்டி வீதம், அரச கொள்கைகள், சம்பள மட்டம்

IV. கலாசாரம், விலைமட்டம், உரிமையாளர்.

14) இலங்கையின் பொருளாதாரத்தில் முதல் நிலை அல்லது இரண்டாம் நிலைப் பிரிவு வணிகங்களுக்குள் அடங்காதது.

I. கால்நடைத் தொழில்

II. வங்கிச் சேவை

III. சப்பாத்து உற்பத்தி

IV. கணனி உற்பத்தி

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

15) இலங்கையில் சிறப்பான வளங்கள் காணப்படுகின்றன. அவ்வாறான வளங்களுள் கலாசார வளம் உள்ளடங்கும் விடை,

I. நீர் வீழ்ச்சி, ஆறு, கடல்

II. புராதன இடங்கள், சிற்பங்கள், சீகிரியா

III. இரத்தினக்கல், வைரம், இல்மனைட்

IV. யால, குமன, வஸ்கமுவ

**02) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. வணிகச் சூழல் என்றால் என்ன?
2. வணிகச் சூழலை கற்பதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் 4 தருக.
3. புராதன வணிகச் சூழலுக்கும் நவீன வணிகச் சூழலுக்கும் இடையிலான 2 வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
4. வணிகச் சூழலின் 2 பிரதான பிரிவுகளைக் குறிப்பிட்டு அப்பிரிவுக்கான 2 உதாரணங்கள் தருக.
5. ஊழியர்கள் வணிகத்திற்கு சக்தியாக அமைவது எவ்வாறு என்பதைை விளக்குக.
6. பொருயாதார சூழல் காரணிகள் வணிகத்திற்கு சவாலாக அமையக்கூடிய சந்தர்ப்பங்கள் 2 தருக.
7. இலங்கை பொருளாதாரத்தில் காணப்படுகின்ற பிரதான வணிகத் துறைகள் மூன்றைக் குறிப்பிட்டு உதாரணம் தருக.
8. வணிகத்துறையில் காணப்படுகின்ற புதிய போக்குகள் 2 தருக.
9. வணிகச் சூழலில் காணப்படுகின்ற புதிய போக்குகள் பற்றி கவனத்திற் கொள்வதற்கான 2 காரணங்கள் தருக.
10. இலங்கையில் காணப்படுகின்ற கீழே காட்டப்பட்டுள்ள மனிதவளமல்லாத வளங்களுக்கு ஒவ்வொரு உதாரணம் வீதம் தருக.

இயற்கை வளம்

கனிய வளம்

கலாச்சார வளம்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH